
# வாழ்நாளின் வழிப்பறி அல்லவா?

## ‘கணையாழி’ தலையங்கம்!




**வே**தாச்சலம் பெயரைத்
தமிழாக்கிக் கொண்ட
மறைமலை அடிகளுக்கு
150ஆவது பிறந்தநாள்
ஜூலை 15!

வேதங்கள் மலையாகத் திரண்டு
தலையில் சிவனை வைத்துக்
கொண்டாடிய இடம்
திருக்கழுக்குன்றமாம்!
வேதம் = மறை அசலம் = மலை
வேதாச்சலம், மறைமலையானார்.

“மனித வசியம் அல்லது
மனக் கவர்ச்சி” குறித்து
அந்தக் காலத்திலேயே
நூல் எழுதியிருக்கிறார்!

20ஆம் நூற்றாண்டின்
இணையற்ற புலவர் என்று
கா. சு. பிள்ளையால்
கொண்டாடப் பெற்றவர்!
தமிழர் மதம் கண்டவர்!

நான்காவது வருணச்
சூத்திரர்கள்
வேளாளர் இல்லை என்று

வருணப் பேதத்தைக்
கேள்வி கேட்டவர்!

சென்னை மாகாணத்
தமிழர் மாநாட்டிற்குத் (1932)
தலைமை வகித்தவர்!

கோகலே மண்டபத்தில் நடந்த
இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் (1937)
மொழி உணர்ச்சியை
முன்னெடுத்தவர்!

சாதி வேற்றுமையையும்
போலிச் சைவத்தையும்
கண்டித்திருப்பவர்.

தமிழ், வடமொழி, ஆங்கிலம் என்று
மும்மொழிப் புலவர்!

ஆனாலும்
இந்தி பொதுமொழியா? என்று
கேள்வி கேட்டதோடு
அதற்கான தகுதி
இந்திக்கு இல்லை!
தமிழுக்குத்தான் உண்டு என்று
சான்று ஆதாரங்களைத் தந்தவர்!

இப்படி
வேதாச்சலம்
மறைமலை அடிகளாகப்
பரிணாம வளர்ச்சி பெறக்
குருவாக இருந்தவர்
சோமசுந்தர நாயகர்!
பள்ளிப் பருவத்திலேயே
அவரை நாயகர் உரை
வழிநடத்தி இருக்கிறது!

நாகையிலிருந்து அப்போது
வெளிவந்து கொண்டிருந்த
“பத்ரிகா “ வார இதழில்
நாயகர் கருத்தை
மறுத்தெழுதிய மாயாவிக்கு.
“நாகை நீலலோசனியில்”

முருகவேள் எனும்

புனைபெயரில்
பள்ளிப் பருவத்திலேயே
மறுப்பெழுதி இருக்கிறார்.

கேள்விப்பட்ட நாயகரிடம்
அழைத்துச் சென்றிருக்கிறார்
மதுரை நாயகம்!

குருவும் மாணவரும்
சந்தித்துக் கொண்ட பின்
சென்னைக்கு வருகிறார்.
சித்தாந்த தீபிகைக்கு
ஆசிரியர் ஆகிறார்!

சேதுபதிக்கும் குருநாதராம்
நாயகர்!

சிக்காகோவிலிருந்து திரும்பிய
விவேகானந்தர்,
சேதுபதியின் விருந்தினராகச்



அன்புடன்
**ம.ரா.**

சென்னை மாளிகையில்
தங்கி இருந்த போது,
நாயகருக்கும் விவேகானந்தருக்கும்
விவாதம் நடந்திருக்கிறது.
சேதுபதி முன்னிலையில்!

வேதம் அநாதியா? இறைவன் அநா
தியா?
கேட்டவர் நாயகர்.

வேதமே ஆதி என்றவர்
விவேகானந்தர்.

வேதமே முதல் என்றால்,
வேதத்தைத் தந்த
இறைவன் யார்? என்றார் நாயகர்!

பொருள் ஒன்றா? பலவா?
கடவுள் பெரிதா? மாயை பெரிதா?

இப்படியான
நாயகரின் கேள்விகளால்
திகைத்துப் போன விவேகானந்தர்

படிக்கத் தொடங்கினாராம்
ஜே.எம். நல்லசாமியின்
ஆங்கில மொழிபெயர்ப்பில்
சிவஞானபோதத்தை!

தன் குருநாதரைப் பற்றி
அடிகள் சொன்னதைப்
பதிவு செய்திருக்கிறார்

அவர் மகன்
பேராசிரியர் மறை திருநாவுக்கரசு!

கூடுதல் மொழி அறிவால்
மேலாதிக்கம் செலுத்திவந்த
காலம் மலை ஏறிப் போய்விட்டது.

அண்மைக்காலத் தொழில்நுட்பம்
அறிவித்திருக்கிறது.
தாய்மொழியை
இணைய மொழி ஆக்கிவிட்டால்,
இன்னொரு மொழியின்
தேவை இல்லாமலே
தேவையானவற்றைத்
தெரிந்துகொள்ள முடியும்!

ஆனாலும் சொல்கிறார்கள்,
மும்மொழி அவசியமாம்!
ஒரு மொழி தாய்மொழியாம்;
இரண்டாவது பொதுமொழியாம்;
மூன்றாவது உலக மொழியாம்!

இப்போது
இணைய மொழியே உலக மொழி
இணைய மொழியே பொதுமொழி.

ஆகவே.
தாய்மொழியை
இணைய மொழி ஆக்காமல்,
பொதுமொழி, உலக மொழி.
மும்மொழி என்பதெல்லாம்
மக்கள்
வாழ்நாளின் வழிப்பறி அல்லவா?

நன்றி :
**‘கணையாழி’**
ஜூலை 2026

---

குழந்தைகளிடம் எப்படிப் பேச வேண்டும் என்கிற அடிப்படைப் பண்பு கூட இல்லாமல் நடந்து கொண்ட

# அமைச்சர் கீர்த்தனாவின் செயல் வன்மையாகக் கண்டிக்கத் தக்கது!

## தி.மு.க. அயலக அணி கடும் கண்டனம்!

**சென்னை, ஜூலை 8-**

**அரசுப் பள்ளியில் ஆய்வு என நேற்று முன்தினம் ‘ரீல்ஸ்’ வெளியிட்ட ‘ரீல்ஸ் புகழ்’ அமைச்சர் கீர்த்தனா, அந்தப் பள்ளிச் சிறுமியிடம் நடந்து கொண்ட விதம் அனைத்துத் தரப்பிலிருந்தும் கடும் கண்டனத்திற்குள்ளாகியுள்ளது.**

**இதையொட்டி, தி.மு.க. அயலக அணி சார்பில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட வலைதளப் பதிவில், “குழந்தைகளிடம் எப்படிப் பேச வேண்டும் என்கிற அடிப்படைப் பண்பு கூட இல்லாமல் நடந்து கொண்ட அமைச்சர் கீர்த்தனாவின் செயல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது” என கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அந்த வலைதளப் பதிவு வருமாறு:-

“Hands off to all of you” அல்ல.

அது “Hats off to all of you”.

“Stand such a wonderful” அல்ல.

அது “Stand in front of such a wonderful...”.

மூன்று பேரின் பெயர்களைச் சொன்னால், அதற்கடுத்து பயன்படுத்த வேண்டியது ‘has’ அல்ல, ‘have’.

“Any of the sports minister” அல்ல.

அது “Any of the sports ministers”.

“have a breakfast” அல்ல.

அது “have breakfast”.

அமைச்சர் கீர்த்தனா மேடைகளில் பேசும் ஆங்கிலத்தில் பல அடிப்படைப் பிழைகள் இருந்தாலும், தி.மு.க. தரப்பில் இருந்து யாரும் அதை ஒரு குறையாகச் சுட்டிக்காட்டி விமர்சிக்கவில்லை. ஏனென்றால், மொழி என்பது வெறும் தொடர்பு சாதனம் மட்டுமே. ஒருவருக்கு மொழியை விடச் செயல்பாடுகளே முக்கியம் என்பது எங்களுடைய நம்பிக்கை.

ஆனால், இவ்வளவு பெரிய பொறுப்பில் இருக்கும் ஒரு அமைச்சர், பள்ளிகளுக்கு ஆய்வுக்குச் செல்லும்போது குழந்தைகளிடம் எப்படிப் பேச வேண்டும் என்கிற அடிப்படைப் பக்குவம் கூட இல்லாமல் நடந்து கொள்வதுதான் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

பள்ளிகளுக்குச் செல்லும்போது மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். பெண்குழந்தைகளுக்குக் கல்வியின் அவசியத்தை உணர்த்தி அவர்களின் எதிர்காலத்திற்குத் தன்னம்பிக்கை கொடுக்க வேண்டும்.

அதை விடுத்து, மாணவர்களின் தன்னம்பிக்கையை உடைக்கும் வகையிலும், அவர்கள் பள்ளிக்கே வர பயப்படும் வகையிலும் நடந்து கொள்வது ஒரு அமைச்சருக்கு அழகல்ல.

**மாணவச் செல்வங்களிடம் தாழ்வு மனப்பான்மையை வளர்க்கும் இது போன்ற அமைச்சர்கள் பள்ளிகளுக்குள் செல்லாமல் இருப்பதே நல்லது.**

குழந்தைகளிடம் எப்படிப் பேச வேண்டும், அவர்களுக்கு எவ்வாறு நம்பிக்கை கொடுக்க வேண்டும் என்பதை த.வெ.க. அமைச்சர்கள் முதலில் கற்றுக்கொள்ள வேண்டும்!

இவ்வாறு அவ்வலைதளப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

தான் நினைப்பதுதான் சரி என பிடிவாதம் பிடிப்பது ஆய்வின் பணி அல்ல!

# ‘Last Bench’ என்று சுட்டிக்காட்டிப் பேசுபவர்கள் எல்லாம் பள்ளிக்குள் செல்லாதீர்கள்!

## ஆய்வுக்குச் சென்ற தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா அராஜகம் – பள்ளிக் கல்வித்துறை முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கண்டனம்!

**சென்னை, ஜூலை 8-**

**“தான் நினைப்பதுதான் சரி என பிடிவாதம் பிடிப்பது ஆய்வின் பணி அல்ல என்றும் ‘Last Bench’” என்று “சுட்டிக்காட்டி பேசுபவர்கள் எல்லாம் பள்ளிக்குள் செல்லாதீர்கள்” என்று பள்ளிக் கல்வித்துறை முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து முன்னாள் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ட்விட்டர் பதிவு வருமாறு:

தான் நினைப்பதுதான் சரி என பிடிவாதம் பிடிப்பது ஆய்வின் பணி அல்ல! அமைச்சரின் பணியும் அதுவல்ல!



மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். ஆசிரியப் பெருமக்களை ஊக்கப்படுத்த வேண்டும். அதை விடுத்து Last Bench என்று சுட்டிக்காட்டி பேசுபவர்கள் எல்லாம் பள்ளிகளுக்குள் செல்லாதீர்கள். மாணவச் செல்வங்களிடம் தாழ்வு மனப்பான்மையை வளர்க்காதீர்கள்.

தப்போ சரியோ தைரியமாக பதில் சொன்ன அன்பு மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் அன்பும் வாழ்த்துகளும்.

(அதற்கு தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா பதிலளித்து இருந்தார்).

தங்களின் தவறை சுட்டிக்காட்டியதால், எனக்கு பதில் சொல்கிறேன். நேரடியாக கேள்வி கேட்கிறேன் எனும் பெயரில் மறுபடியும் அரசுப் பள்ளிகள் மீதான வெறுப்பை வெளிப்படுத்துகிறீர்கள். மீண்டும் கார்ப்பரேட் மனநிலை வெளியே வருகிறது.

“அரசுப் பள்ளிகள் என்பது வறுமையின் அடையாளம் அல்ல! அது பெருமையின் அடையாளம்” எனும் நம்பிக்கையை ஐந்தாண்டுகளாக விதைத்துள்ளோம். அதை பல்வேறு வகைகளில் நிரூபித்தும் உள்ளோம். Reelsஐ மட்டும் பார்க்காமல் எங்கள் மாணவச் செல்வங்களின் சாதனைகளையும் பார்த்து தெரிந்துகொள்ளுங்கள். அரசுப் பள்ளிகள் மீதான வன்மம் இதோடு நிற்கட்டும்! இது தமிழ்நாட்டு கல்விச் சூழலுக்கு உகந்தது அல்ல.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சமூக வலைதளப்பதிவில் பதிவிட்டுள்ளார்.

---

# த.வெ.க. விழா - நெரிசலில் மயங்கி விழுந்த பெண்கள் - மதுரையில் நடந்த ‘மினி கரூர் சம்பவம்’

மதுரை, ஜூலை 8 –

மதுரையில் நடந்த த.வெ.க. நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ‘மினி கரூர் சம்பவம்’ போல் கூட்ட நெரிசலில் சிக்கி பெண்கள் மயங்கி விழுந்தது, குழந்தைகள் கதறி அழுததால் பரபரப்பு ஏற்பட்டது.

தமிழக முதல்வர் ஜோசப் விஜய் பிறந்த நாளையொட்டி மதுரை பழங்காநத்தம் பகுதியில் த.வெ.க. இளைஞரணி சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இவ்விழாவில் 1000 பெண்களுக்கு சில்வர் சம்படம், தையல் இயந்திரம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதில் கலந்து கொண்ட மேற்கு தொகுதி எம்.எல்.ஏ. தங்கப்பாண்டியன் பெண்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். முன்னதாக நலத்திட்ட உதவிகள் வாங்க வந்த பெண்களை ஒவ்வொரு பகுதியாக வழங்குவதாக கூறி தடுப்புகளுக்குள் அடைத்து வைத்திருந்தனர். ஏற்கனவே விழா துவங்குவதற்கு பல மணி நேரத்திற்கு முன்பே வரவழைக்கப்பட்டிருந்த பெண்கள் பொறுமையிழந்து நலத்திட்ட உதவிகளை வாங்குவதற்காக மேடை அருகே முண்டியடித்து கொண்டு வந்தனர். அப்போது, அங்கிருந்த பாதுகாவலர்அவர்களை தடுத்ததால் திடீர் நெரிசல், தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் சில பெண்கள் மயக்கமடைந்து கீழே விழுந்தனர். அவர்களுக்கு அருகில் இருந்தவர்கள் தண்ணீர் கொடுத்து ஆசுவாசப்படுத்தினர். மேலும் விழாவிற்கு வந்த குழந்தைகளும் கூட்ட நெரிசலில் சிக்கி கதறி அழுததால் பரபரப்பு ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில் நெரி சல் அதிகமாகவே தவெ கவினர், ”நலத்திட்ட உதவிகள், உங்கள் வீட் டிற்கு வரும் கிளம்பு.. கிளம்புஎன அங்கிருந்த பெண்களை வெளியேற் றினர். அப்போது நலத்திட்ட உதவிகள் வாங்க வந்து வெறுங்கையுடன் திரும்பி செல்வதா என ஏமாற்றமடைந்த பெண் கள் மேடையில் ஏறி த.வெ.க. வினருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடு பட்டனர். இந்த களே பேரத்திற்கு மத்தியில் எம்எல்ஏ தங்கப்பாண் டியன் அனைத்து சம்பவங்களையும் வேடிக்கை பார்த்தபடி அங்கிருந்து எஸ்கேப் ஆகி விட்ட தாக விழாவிற்கு வந்த பெண்கள் குற்றம் சாட்டினர். மேலும், அனைத்து நிகழ்வுகளையும் பார்த்த பிறகு கொஞ்ச நேரத்தில் கரூர் கூட்ட நெரிசல் போல் ஆகி விட்டதே. என பெண்கள் பேசி சென்றனர்.


### ஆண் பாதுகாவலர்கள் அத்துமீறல்

விழாவில் மேடை ஏறும் படிக்கட்டுகளில் த.வெ.க. வினர் மற்றும் தனியார் ஆண் பாதுகாவலர்கள் நின்றுகொண்டு பெண்களின் கைகள் மட்டுமின்றி கண்ட இடங்களில் பிடித்து மேடைக்கு ஏற்றி விட்டனர். பெண்கள் அதிகளவில் கலந்து கொண்ட விழாவில் பெண் பாதுகாவலர்கள் நியமிக்கா மல் ஆண் பாதுகாவலர்களை நியமித்ததும், அவர்களும் பாதுகாப்பு என்ற பெயரில் பெண்கள் மீது விழுவதும், பெண்கள் இருக்கும் பகுதிகளுக்குள் செல்வதும் என அத்துமீறல்களில் ஈடுபட்டனர். இந்தச் செயல், விழாவிற்கு வந்திருந்த பெண்களை முகம் சுளிக்க வைத்ததுடன் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொள்ளாச்சி எஸ். ராஜு
### ஜூலை 8 (2014)



**தனது இளமை காலந்தொட்டே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பொள்ளாச்சி பகுதியில் பணியாற்றியவர்**

**1972ஆம் ஆண்டு முதல் 2007 ஆண்டு வரை தொடர்ந்து பொள்ளாச்சி நகரச் செயலாளராகவும் பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.**

**கழகத்திற்கு சோதனை ஏற்பட்டபோது கொங்கு மண்டலத்தில் கழகத்தை வளர்த்திட பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.**

**பொள்ளாச்சி நகர்மன்ற உறுப்பினராகவும் – நகர்மன்றத் தலைவராகவும் பொறுப்பு வகித்ததுடன், 1996ஆம் ஆண்டு பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**1959ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

வானகரத்திற்கு பைக்கில் சென்றபோது விபத்து:

# லாரி மோதி படுகாயம் அடைந்த தாய், மகனை மீட்ட கனிமொழி கருணாநிதி எம்.பி.!

பூந்தமல்லி, ஜூலை 8–

வானகரத்தில் பைக் மீது லாரி மோதியதில் தாய், மகன் படுகாயம் அடைந்தனர். அப்போது திருமண நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக காரில் சென்று கொண்டிருந்த கனிமொழி கருணாநிதி எம்.பி. மீட்டு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார். ஆனால், வாலிபர் மருத்துவமனையில் பரிதாபமாக உயிரிழந்தார். மதுரவாயல் அடுத்த ஆலப் பாக்கம் பகுதியைச் சேர்ந்தவர் செல்வகுமார். இவரது மனைவி சுந்தரி. இவர்களது மகன் ரித்திஷ் குமார் (18). இவர் 12ம் வகுப்பு படித்து வந்தார். இந்நிலையில், நேற்று முன்தினம் மதியம் வானகரத்தில் உள்ள மீன் மார்க்கெட்டில் மீன் வாங்குவ தற்காக ரித்திஷ் குமார் தனது தாய் சுந்தரியை அழைத்துக் கொண்டு பைக்கில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது பூந்தமல்லி நெடுஞ்சாலை, வானகரம் அருகே மீன் மார்க்கெட் செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் திரும்பிய போது கோயம்பேட்டில் இருந்து வேகமாக வந்த லாரி, பைக் மீது மோதியது. இதில் இருவரும் நிலை தடுமாறி கீழே விழுந்ததில் பலத்த காயம் ஏற்பட்டது. அப்போது தி.மு.க. தலைமை நிலைய செயலாளர் துறைமுகம் காஜா இல்லத் திருமண நிகழ்ச்சி யில் பங்கேற்பதற்காக தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. திருவேற்காட்டிற்கு காரில் சென்று கொண்டிருந்தார்.

இந்த விபத்தை பார்த்ததும் கனிமொழி ஒரு நொடி கூட தாமதிக்காமல் தனது வாகனத்தை நிறுத்தி சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளை ஒருங்கிணைத்தார். லாரியின் சக்கரத்தில் சிக்கி உயிருக்கு போராடிக் கொண்டிருந்த வாலிபரை உடனடியாக மீட்டு மருத்துவமனைக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளை காவல் துறையினருடன் இணைந்து செய்தார்.

அதே நேரத்தில், தன்னுடன் அரசியல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வந்த தமிழன் பிரசன்னாவின் வாகனம் பின்னால் வந்து கொண்டிருந்ததை கவனித்த கனிமொழி, அந்த வாகனத்தை நிறுத்தச் சொல்லி, அதன் ஓட்டுநரிடம் பலத்த காயமடைந்திருந்த அந்த வாலிபரின் தாயை உடனடியாக மருத்துவமனையில் சேர்க்குமாறு அறிவுறுத்தினார். இதையடுத்து உடனடியாக அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகி ச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

விபத்தில் சிக்கிய இருவரும் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டதை உறுதி செய்த பின்னரே கனிமொழி அங்கிருந்து திருமண நிகழ்ச்சிக்குச் சென்றார். இந்நிலையில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ரித்திஷ் குமார் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். அவரது தாய் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த சம்பவம் குறித்து ஆவடி போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் இறந்து போன ரித்திஷ் குமார் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக போரூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் விபத்து ஏற்படுத்திய லாரி டிரைவர் சக்திவேல் என்பவரை கைது செய்து விசாரித்து வருகின்றனர். மீன் வாங்குவதற்காக இரு சக்கர வாகனத்தில் சென்ற போது லாரி மோதியதில் வாலிபர் இறந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.




தாம்பரம் முன்னாள் நகர கழகச் செயலாளரும், தாம்பரம் நகர மன்ற முன்னாள் தலைவர் வ.கன்னியப்பன் அவர்களின் 19 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலகண்ணன் அன்னாரது படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி, பின்னர் ஊர்வலமாக நடந்து சென்று தாம்பரம் இடுகாட்டில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் மௌன அஞ்சலி செலுத்தினர். உடன் துணை மேயர் கோ.காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன், பகுதி துணை செயலாளர் வ.க.ரவி, மருத்துவ அணி டாக்டர் ஆர்.எஸ்.கிருத்திகாதேவி, மாநகர மகளிர் அணி அமைப்பாளர் ரமணி ஆதிமூலம் எம்.சி, பகுதி அவைத் தலைவர் டி.ஆர்.கோபி எம்.சி, மாநகர துணை செயலாளர் சதாசிவம் மற்றும் கழக உடன்பிறப்புகள் பலர் பங்கேற்றனர்.